1. மண்டலம்-15ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம்– 192 முதல் 200 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா? என இரு தினங்களுக்கு ஒரு முறை கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 374 பணியாளர்களை (Survey Worker) மேலும் 25.06.2021 முதல் 24.09.2021 வரை மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்ய அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட 374 பணியாளர்களுக்கு (Survey Workers) ஊதியமாக ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ. 391/-வீதம், 374 பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 391 x 374 x 92 = ரூ.1,34,53,528/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து ஐந்நூற்று இருபத்து எட்டு மட்டும்) வழங்கவும்,
3. இப்பணிக்கான செலவீனத்தை கணக்கு குறியீட்டு எண்.20-21-07, கணக்கு தலைப்பு எண். 230-70-12-03 என்ற தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஊதியம் வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**Deputy Commissioner (Health) remarks dated.30.07.21 as follows:**

**"Restrict FSW till 31st July. From 1st August further reduction is as per orders"**

முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 30.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் மேற்குறிப்புடன், 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**ம.அ.3.பொ.சு.து.ந.க.எண்.எச்1/656/2021**

**தீர்மானஎண்.635/2021** **நாள்: 03-08-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 - பொது சுகாதாரத்துறை - கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு 525 தற்காலிக பணியாளர்களின் பணி காலம் 30.06.2021 உடன் முடிவடைந்து விட்டதால் ICMR ஆய்வு அறிக்கையின் படி கோட்டம் வாரியாக கணக்கீடு செய்யப்பட்டு 253 எண்ணிக்கையிலான தற்காலிக பணியாளர்களை 01.07.2021 முதல் 31.07.2021 வரையிலான ஒரு மாத காலத்திற்கு பணி மேற்கொள்ள அனுமதி.**

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 25.06.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-3, கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளை தீவிர படுத்தும் விதமாக வீடுகள் தோறும் காய்ச்சல் கண்டவர்கள் குறித்து கணக்கு எடுக்கும் பணிக்காக சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த பட்ச தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் நபர் ஒன்றுக்கு 100 முதல் 120 வரையிலான வீடுகளில் தினந்தோறும் கொரோனா நோய் தடுப்பு பணி மேற்கொள்ள பணியமர்த்தப்பட்ட 525 தற்காலிக பணியாளர்களின் பணி காலம் 30.06.2021 உடன் முடிவடைந்து விட்டதால் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஆணையின் படியும் ICMR ஆய்வு அறிக்கையின் படி, கோட்டம் வாரியாக கணக்கிட்டு தெரிவு செய்யப்பட்ட 253 எண்ணிக்கையிலான தற்காலிக பணியாளர்களை 01.07.2021 முதல் 31.07.2021 வரையிலான ஒரு மாத காலத்திற்கு பணி மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது.

| வ. எண் | கோட்டம் | மொத்தம் வீடுகளின் எண்ணிக்கை | செக்டர்களின் எண்ணிக்கை | தேவைப்படும் தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கை | ICMR ஆய்வு அறிக்கையின் படி குறைக்கப்பட வேண்டிய % | ICMR ஆய்வு அறிக்கையின் படி தெரிவு செய்யப்பட்ட தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு மாத ஊதியம் | ஒரு மாத காலத்திற்கு ஊதியம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 22 | 5456 | 11 | 55 | 30 | 39 | 12121 | 472719 |
| 2 | 23 | 2796 | 6 | 30 | 60 | 12 | 12121 | 145452 |
| 3 | 24 | 8872 | 18 | 90 | 60 | 36 | 12121 | 436356 |
| 4 | 25 | 2369 | 6 | 30 | 60 | 12 | 12121 | 145452 |
| 5 | 26 | 7136 | 12 | 60 | 60 | 24 | 12121 | 290904 |
| 6 | 27 | 4260 | 8 | 40 | 60 | 16 | 12121 | 193936 |
| 7 | 28 | 4094 | 8 | 40 | 60 | 16 | 12121 | 193936 |
| 8 | 29 | 2178 | 5 | 25 | 30 | 18 | 12121 | 218178 |
| 9 | 30 | 2296 | 6 | 30 | 60 | 12 | 12121 | 145452 |
| 10 | 31 | 2576 | 6 | 35 | 60 | 14 | 12121 | 169694 |
| 11 | 32 | 4164 | 5 | 30 | 60 | 12 | 12121 | 145452 |
| 12 | 33 | 5609 | 12 | 60 | 30 | 42 | 12121 | 509082 |
| மொத்தம் | | 51806 | 103 | 525 | | 253 | | 3066613 |

எனவே, மண்டலம்-3 (மாதவரம்) கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோன நோய் தடுப்பு பணி மேற்கொள்ள ஒரு நபருக்கு தலா 100 முதல் 120 வரையிலான வீடுகளில் 2 மற்றும் 3 நாட்களுக்கு ஒரு முறை காய்ச்சல் கண்டவர்கள் குறித்து கணக்கு எடுக்கும் பணி மேற்கொள்ள ICMR ஆய்வு அறிக்கையின் படி தெரிவு செய்யப்பட்ட 253 தற்காலிக தினக்கூலி பணியாளர்களை ஒரு மாத காலத்திற்கு பணி மேற்கொள்ள சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

அ) மண்டலம்-3 கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து காய்ச்சல் கண்டவர்கள் குறித்து கணக்கு எடுக்கும் பணி மேற்கொள்ள ICMR ஆய்வு அறிக்கையின் படி தெரிவு செய்யப்பட்ட 253 தற்காலிக தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்தி மேற்கொள்வதற்கும்,

ஆ) மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த பட்ச தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 01.07.2021 முதல் 31.07.2021 வரையிலான ஒரு மாத காலத்திற்கான ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.12,121/- என்ற வீதத்தில் 253 நபர்களுக்கு ஒரு மாத காலத்திற்கு வழங்க வேண்டிய தொகை (12121 X 253 = ரூ.30,66,613/-) (ரூபாய் முப்பது லட்சத்து அறுபத்து ஆறாயிரத்து அறநூற்று பதிமூன்று மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

இ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீட்டு எண். 230-70-12-03 லிருந்து செலவு செய்வதற்கும்,

ஈ) மேற்கண்ட செலவினத்திற்கான நிதியினை நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய ஆணை வேண்டுவதற்கும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**Deputy Commissioner (Health) remarks dated.28.07.21 as follows:**

**"FSW tobe revisited based on ICMR report from 1st August"**

முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 02.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் மேற்குறிப்புடன், அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**ம. அ.12 பொ.சு.து. ந.க. எண் எச்2/2017/2021**

**தீர்மானஎண்.636/2021** **நாள்:05-08-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-12 - கோட்டம்-156 முதல் 167 வரையுள்ள வீடுகளுக்கு சென்று கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு - 663 தற்காலிக பணியாளர்கள் 08.04.2021 முதல் 06.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டது - மீண்டும் 01.07.2021 முதல் 30.09.2021 வரை மூன்று மாத காலத்திற்கு 308 நபர்களுக்கு பணி நீட்டிப்பு செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms)எண். 95, நாள்: 13.03.202ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (covid 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12 ல் கோட்டம்-156 முதல் 167 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும் ( Fever Survallience Workers) பணி மேற்கொள்ளவும் 663 பணியாளர்களை 08.04.2021 முதல் 06.07.2021 வரை மூன்று மாத காலத்திற்கு நியமனம் செய்து ஒரு நாளைக்கு ரூ .391/- என (90நாட்கள்) பணியமர்த்த சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்: 468/2021, நாள்: 07.05.2021ல் அனுமதி பெறப்பட்டது.

தற்போது கொரோனா தொற்று குறைந்து வரும் நிலையில் முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.06.2021 கலந்தாய்வு கூட்ட அறிவுறுத்தலின் படியும், ICMR அறிக்கையின்படியும் கோட்ட வாரியாக ஆட்குறைப்பு செய்யப்பட்டு மீண்டும் 01.07.2021 முதல் 30.09.2021 வரையிலான காலத்திற்கு (90 நாட்கள்) பணி நீட்டிப்பு செய்ய அனுமதி மற்றும் ஆணை வேண்டப்படுகிறது.

| வரிசை எண்ண | வார்டு எண். | தற்போது பணிபுரிபவர்களின் எண்ணிக்கை ICMR Recommands | 01.07.2021ல் பணியமர்த்தப் படுபவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 156 | 135 | 54 |
| 2 | 157 | 57 | 40 |
| 3 | 158 | 29 | 20 |
| 4 | 159 | 10 | 7 |
| 5 | 160 | 50 | 35 |
| 6 | 161 | 53 | 21 |
| 7 | 162 | 51 | 20 |
| 8 | 163 | 42 | 17 |
| 9 | 164 | 46 | 18 |
| 10 | 165 | 63 | 25 |
| 11 | 166 | 55 | 22 |
| 12 | 167 | 72 | 29 |
| | | 663 | 308 |

அதனடிப்படையில் மண்டலம்-12 ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணி மேற்கொள்ள கோட்டம் 156 முதல் 167 வரை உள்ள (Fever Survallience Workers) 308 நபர்களின் விவரம் மேற்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்படுகிறது

எனவே,

(அ) மண்டலம்-12ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணி மேற்கொள்ள கோட்டம்-156 முதல் 167 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்யும் பணி மேற்கொள்ள 308 தற்காலிக பணியாளர்களை 01.07.2021 முதல் 30.09.2021 வரை மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்துவதற்கு நிர்வாக அனுமதியும்,

**ம. அ.12 பொ.சு.து. ந.க. எண் எச்2/2017/2021**

(ஆ) மேற்படி 308 பணியாளர்க்கு ஊதியமாக ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.391/-வீதம் 90 நாட்களுக்கு ரூ1,10,79,376/. (ரூபாய் ஒரு கோடியே பத்து லட்சத்து எழுபத் தொன்பதாயிரத்து முந்நூற்றி எழுபத்தாறு மட்டும்) வழங்குவதற்கு அனுமதியும்,

(இ) மேற்கண்ட செலவினத் தொகையினை மனித வளம் (Man Power) பிரிவு எண் 20-21-07 கணக்கு குறியீடு எண் 230-701-203 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு அளிக்க நிதி ஆலோசகர் அவர்களைக் கேட்டுக் கொள்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**Deputy Commissioner (Health) remarks dated.30.07.21 as follows:**

**“FSW numbers tobe kept till 31st July. Again should be revisited based on ICMR report”**

முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 02.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் மேற்குறிப்புடன், அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**பொ.து.ந.க.எண்.இ6/30711/2020**

**தீர்மானஎண்.637/2021** **நாள்:05-08-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 01.10.2020 மைய நாளிட்டு 2020-2021 ஆம் பட்டியலாண்டில் பதிவுரு எழுத்தர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி 2020-2021 ஆம் பட்டியல் ஆண்டிற்கான பதிவுரு எழுத்தர் காலிப்பணியிடங்களை ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ரூ.15900-50400 (Level-2) என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் நிரப்புவதற்கான பட்டியல் 01.10.2020 என்ற மைய நாளிட்டு (Crucial Date) தயாரிக்கப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ஆம் நிலைப்பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009ல் பதிவுரு எழுத்தர் பதவி உயர்வுக்கு நியமன முறை மற்றும் கல்வித்தகுதி கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் | ஊதிய விகிதம் மற்றும் நிர்ணய நாள் |
|---|---|---|---|
| பதிவுரு எழுத்தர் | அனைத்து கீழ்வகை பதவியிடங்களிலிருந்து பதவி உயர்வு மூலம் (கீழ்நிலை பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிப்புரிந்திருக்க வேண்டும்) | குறைந்தபட்ச பொதுக்கல்வி தகுதி | ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ரூ.15900 - 50400<br>நிர்ணய நாள்<br>ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர்-1ஆம் நாள். |

**பதிவுரு எழுத்தர் உத்தேசிக்கப்பட்ட காலிப்பணியிட விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | **Total cadre strength** | **121 Nos** |
| | Temporary | - NIL – |
| | **Permanent** | **121 Nos** |
| 2. | Number of vacancies of retirements (For 12 months as in para 14 of G.O.Ms.No.603, Personnel and Administrative Reforms (Per.M) Department, Dated 12th June 1985) (or on the crucial date prescribed in the rules) | - NIL – |
| 3. | 5 percent leave reserve vacancies with reference to the working strength (Not applicable for direct recruitment) | - NIL – |
| 4. | Number of likely promotions (2020 – 2021)<br>**a) Record Clerk to Conservancy Inspector = 4 Nos**<br>(i) S. Purusothaman, R.C/ACC.<br>(ii) R. Kumar, R.C/Z-12.<br>C. Malayathri, R.C/General Dept.,<br>(iv)M. Janaki Raman, R.C/S.W.D.<br>**b) Record Clerk to Junior Assistant = 1 No.**<br>Tmt.U. Punitha. R.C/Electrical Dept | **05 Nos** |
| 5. | Number of new posts likely to be sanctioned during the panel period and the number of posts sanctioned earlier but not included in the previous year estimate | - NIL – |
| | **Vacancies** | **05 Nos** |

**பொ.சு.ந.க.எண்.இ6/30711/2020**

| | | |
|---|---|---|
| 6. | Number of vacancies to be provided for unexpected contingencies on a staggered scale as indicated in G.O.Ms.No.103, Personnel and Administrative Reforms (S) Department, Dated 9th October 1994.<br><br>When the total vacancies arrived at with reference General rule 4 are between / Provision for unexpected contingencies as a percentage of total vacancies:<br>1 to 10 – 40%<br>11 to 20 – 30%<br>21 to 40 – 20%<br>41 to 100 – 15%<br>100 and above – 10%<br><br>**Un expected Vacancies 5x40%= 2 Nos** | **02 Nos** |
| | **Deduct** | |
| 7. | Number of posts disbanded during the recruitment year | - NIL – |
| 8. | Number of vacancies apportioned for direct recruitment | |
| | **(Sl.No. 5+2=7) Total** | **07 Nos** |
| 9. | Number of persons who have been promoted against leave vacancies and subsequently reverted to the lower cadre from the approved list already drawn-up. | - NIL – |
| 10. | Number of persons who have been deputed to other posts for a specified period and subsequently revered to the lower cadre for want of vacancy. | - NIL – |

மேற்கண்ட சென்னை மாநகராட்சி சார்நிலை பணி துணை விதிகளின்படி துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் 01.10.2020ஐ மைய நாளாக கொண்ட 2020-2021 ஆம் பட்டியல் ஆண்டின் பதிவுரு எழுத்தர் பதவிக்குரிய தற்காலிக தெரிவுப்பட்டியல் பொதுத்துறையின் 22.06.2021 நாளிட்ட சுற்றறிக்கையின் மூலம் கீழ்கண்டவாறு வெளியிடப்பட்டது.

**2020-2021 ஆம் ஆண்டிற்கான பதிவுரு எழுத்தர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல்**

| வ. எண். | பெயர், பதவி மற்றும் துறை/ மண்டலம் திருவாளர்கள் | பிறந்த தேதி | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 01. | B. மேனகா<br>பெண் இரண சிகிச்சையாளர்<br>தொற்று நோய் மருத்துவமனை | 22/05/1977 | 03/03/2009 |
| 02. | D. பார்த்திபன்<br>துப்புரவு பணியாளர்,<br>மண்டலம்-8. | 30/06/1975 | 02/03/2009 |
| 03. | M. சசிகலா<br>பெண் உதவியாளர்<br>மருத்துவ சேவைகள் துறை | 03/08/1981 | 05/01/2010 |
| 04. | C. மோகன சுந்தரி<br>பெண் உதவியாளர்<br>மருத்துவ சேவைகள் துறை | 12/11/1971 | 05/01/2010 |
| 05. | D. கோமளா<br>பெண் வார்டு உதவியாளர்<br>மருத்துவ சேவைகள் துறை | 03/12/1973 | 23/02/2010 |
| 06. | A. வசந்தி<br>துப்புரவு பணியாளர்,<br>மண்டலம்-8, | 20/06/1982 | 29/05/2010 |

**பொ.து.ந.க.எண்.இ6/ 30711 / 2020**

பொதுத்துறையின் 22.06.2021 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் மேற்படி தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து வட்டார துணை ஆணையர்கள்/துறைத்தலைவர்கள்/மண்டல அலுவலர்கள் தங்களின் கீழ் பணிபுரியும் அனைத்து சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கும் தவறாமல் சுற்றுக்கு விட்டு, இத்தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து பெறப்படும் ஆட்சேபணைக் கருத்துக்களை உரிய ஆவணங்களுடன் 07.07.2021க்குள் பொதுத் துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு கேட்டுக்கொள்ளப்பட்டதனை தொடர்ந்து பெறப்பட்ட ஆட்சேபணை குறித்த விவரங்கள் கீழ்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். (1) | பெயர் மற்றும் பதவி (2) | ஆட்சேபணை விவரம் (3) | துறையின் கருத்து (4) |
|---|---|---|---|
| 01. | S. ராணி<br>பெண் இரண சிகிச்சையாளர்,<br>சுகாதாரத்துறை,<br>மண்டலம்-8. | பதிவுரு எழுத்தர் பதவி உயர்வுக்கான தற்காலிக தெரிவுப்பட்டியலில், தன்னுடைய இளையவர் பெயர்கள் இடம் பெற்றுள்ளதால், தெரிவுப்பட்டியலில் தன்னுடைய பெயரை சேர்க்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். | துறைத்தலைவரின் பரிந்துரை மற்றும் தனியரின் கல்விச் சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு மூப்புப்பட்டியல்படி முதுநிலையின் அடிப்படையில், இறுதி தெரிவுப்பட்டியலில் வரிசைஎண்.2ல் தனியரின் பெயர் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| 02. | M. ஜெயசந்திரன்,<br>சாலை பணியாளர்,<br>மண்டலம்-9 | தனது கல்வி தகுதியின் அடிப்படையில் தற்போது எடுக்கப்படும் பதிவுரு எழுத்தர் பணிக்கு தன்னை பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். | துறைத்தலைவரின் பரிந்துரை மற்றும் தனியரின் கல்விச் சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு மூப்புப்பட்டியல்படி முதுநிலையின் அடிப்படையில், இறுதி தெரிவுப்பட்டியலில் வரிசைஎண்.5ல் தனியரின் பெயர் காண்பிக்கப்பட்டுள்ளது. |

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் 01.10.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020-2021ஆம் ஆண்டிற்கான பதிவுரு எழுத்தர் பதவி உயர்வுக்கான தகுதி வாய்ந்த பணி முதுநிலையில் உள்ள கீழ்நிலை பணியாளர்கள் 7 நபர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

**2020-2021 ஆம் ஆண்டிற்கான பதிவுரு எழுத்தர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல்**

| வ. எண். | பெயர், பதவி மற்றும் துறை/ மண்டலம் (திருவாளர்கள்) | பிறந்த தேதி | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 01. | B. மேனகா<br>பெண் இரண சிகிச்சையாளர்<br>தொற்று நோய் மருத்துவமனை | 22/05/1977 | 03/03/2009 |
| 02. | S. ராணி<br>பெண் இரண சிகிச்சையாளர்<br>சுகாதாரத்துறை<br>மண்டலம்-8. | 27/04/1978 | 24/02/2009 |

| | | | |
|---|---|---|---|
| 03. | D. பார்த்திபன்<br>துப்புரவு பணியாளர்<br>மண்டலம்-8. | 30/06/1975 | 02/03/2009 |
| 04. | M. சசிகலா<br>பெண் உதவியாளர்<br>மருத்துவ சேவைகள் துறை. | 03/08/1981 | 05/01/2010 |
| 05. | M.ஜெயசந்திரன்,<br>சாலைப்பணியாளர்,<br>மண்டலம் - 9 | 14/07/1984 | 29/12/2009 |
| 06. | C. மோகன சுந்தரி<br>பெண் உதவியாளர்<br>மருத்துவ சேவைகள் துறை. | 12/11/1971 | 05/01/2010 |
| 07. | D. கோமளா<br>பெண் வார்டு உதவியாளர்<br>மருத்துவ சேவைகள் துறை. | 03/12/1973 | 23/02/2010 |

தற்போது பதிவுரு எழுத்தர் பதவியில் 5-காலிப்பணியிடங்கள் மட்டுமே உள்ளதால், மேற்கண்ட இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 7 நபர்களில், வரிசை எண். 1 முதல் 5 வரை உள்ள நபர்களுக்கு மட்டுமே பதிவுரு எழுத்தர் பதவி உயர்வு வழங்க இயலும் என்றும், இறுதி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.6 மற்றும் வரிசை எண்.7-ல் இடம் பெற்றுள்ள நபர்களுக்கு பதிவுரு எழுத்தர் பதவியில் காலிப்பணியிடம் ஏற்படும் போது, அப்பதவி நிரப்பப்படும் எனவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

அ) பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட சார்நிலை துணை விதிகள் 2009ன்படி, 01.10.2020ஐ மைய நாளாக் கொண்ட 2020-2021ஆம் ஆண்டிற்கான பதிவுரு எழுத்தர் பதவிக்கு ஒருங்கிணைக்கப்பட்ட கீழ்நிலை பதவியின் மூப்பு நிலை வரிசையின் அடிப்படையில் தகுதி பெற்றுள்ள 7 நபர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

ஆ) இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களுக்கு பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில் ரூ.15900- 50400 என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் பதிவுரு எழுத்தர்களாக பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 02.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"பதிவுரு எழுத்தர் பதவி உயர்வு, இறுதி தெரிவுப்பட்டியல், அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**பொ.து.ந.க.எண்.ஈ3/17925/2021**

**தீர்மான எண்.639 / 2021** **நாள்:05-08-2021**

**அயற்பணி - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பெருநகர சென்னை மாநகராட்சி, அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் - சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும்.**

உயர்நீதிமன்ற அறிவிப்பு எண்.181/2021, நாள்: 30.06.2021, அரசாணை (வா) எண்.132, தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (நிர்வாகம்.1)த் துறை, நாள்: 30.06.2021, அரசாணை (வாலாயம்) எண்.2858, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 11.07.2021 மற்றும் அரசாணை (வாலாயம்) எண்.2857, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 10.07.2021ன்படி, கீழ்க்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பித்த முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எண். | பெயர் (ம) பதவி | உயர்நீதிமன்ற அறிவிப்பு/ அரசாணை எண். மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1. | திரு. கு. தமிழ்செல்வராஜன்,<br>இணை இயக்குநர்/<br>மக்கள் தொடர்பு அலுவலர்,<br>பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வா) எண்.132, தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (நிர்வாகம்.1)த் துறை, நாள்: 30.06.2021 | 03.07.2021 மு.ப. |
| 2. | திருமதி. சு. காஞ்சனா<br>நீதிபதி/ தலைவர்<br>வரிவிதிப்பு மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம்,<br>பெருநகர சென்னை மாநகராட்சி | சென்னை உயர்நீதி மன்ற அறிவிப்பு எண். 181/2021, நாள்: 30.06.2021 | 05.07.2021 மு.ப. |
| 3. | திருமதி. பி. ஃபெர்மி வித்யா,<br>மாவட்ட வருவாய் அலுவலர்/<br>உதவி ஆணையர்(பொ.நி.ம.ப),<br>பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.2858, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 11.07.2021 | 13.07.2021 மு.ப. |
| 4. | திரு. பா. முருகேசன்,<br>மாவட்ட வருவாய் அலுவலர்/<br>மண்டல அலுவலர்-8,<br>பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.2858, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 11.07.2021 | 14.07.2021 பி.ப. |
| 5. | திரு. ச. சூர்ய பிரகாஷ்,<br>மாவட்ட வருவாய் அலுவலர்,<br>அம்மா உணவகம்,<br>பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.2857, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 10.07.2021 | 19.07.2021 மு.ப. |

**"தகவல் மற்றும் பதிவிற்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * * *

**பொ.து.ந.க.எண்.ஈ2/18301/2021**

**தீர்மான எண்.640/2021** **நாள்:05-08-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - 2018 - 2021 ஆம் ஆண்டுக்கான துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலை இன்மை பட்டியலாக வெளியிட அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் துணை திட்ட ஒருங்கிணைப்பாளராக பணிபுரிந்த டாக்டர். ஆர். மனோகரி அவர்கள் 31.01.2018 அன்று வயது முதிர்வு ஓய்வில் சென்றதால், இப்பதவியில் ஒரு காலிப்பணியிடம் ஏற்பட்டுள்ளது. இத்துறையில் துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடம் 1 ஆகும். இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதாரப்பணி விதிகளின்படி துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான நியமன முறை மற்றும் தகுதிகள் பின்வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| i. | பதவியின் பெயர் | துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் | | |
| ii. | மைய நாள் | 01.02.2018 முதல் 01.02.2021 வரை | | |
| iii. | ஊதிய விகிதம் | ரூ.37,400 - 67,000 + தர ஊதியம் ரூ. 8,700 /- (ஏழாவது ஊதியக்குழு பரிந்துரையின்படி, G.O.Ms.No. 303, Finance (Paycell) Dept., dt:11.10.2017 ன் படி ரூ.1,23,100 - 2,15,900/-) | | |
| iv. | காலிப்பணியிட விவரம் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | - | 01 |
| | | மொத்தம் | - | 01 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | - | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | - | 01 |
| | | மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் | - | 00 |
| | | 01.02.2018 முதல் 31.01.2021 வரை பணியிலிருந்து ஓய்வு பெற்றதால்/ பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 01 |
| | | பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 00 |
| | | அரசாணை (ப) எண்.103, நாள்.09.10.2014ன்படி எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 00 |
| | | மொத்த காலிப்பணியிடம் | - | 01 |
| v. | கடந்த ஆண்டுக்கான தெரிவுப் பட்டியல் முழுமையாக பயன் படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம் | ஆம் | | |

**பொ.து.ந.க.எண்.ஈ2/18301/2021**

அரசாணை எண்.161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள். 28.08.1998.ன்படி, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகள் பின்வருமாறு.

| Name of the Post/Scale of the Pay | Method of Appointment | Qualification |
|---|---|---|
| Deputy Project Co-ordinator (City Medical Officer/ Addl. Director) | 1) Promotion from the holders of the post of District Family Welfare Medical Officer | Must have put in not less than 2 Years of the Regular Service as District Family Welfare Medical Officer |
| (Scale of Pay - Rs. 1,23,100 – 2,15,900/-)<br>Crucial Date: 1st February | 2) Deputation from any department or any institution under the control of the State Government. | Must have put in not less than 2 Years of approved service in a post in a department or institution under the control of the State Government Which is similar in status and responsibilities to the post of Deputy Project Co-ordinator in Greater Chennai Corporation. |

தற்போது துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு ஊட்டப்பதவியான மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் முதுநிலைப்படி கீழ்கண்ட மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

| வ.எண் | மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்களின் பெயர்கள் | மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | டாக்டர். ம.ஸ்ரீ.ஹேமலதா | 28.02.2020 |
| 2 | டாக்டர். எஸ். பானுமதி | 17.08.2020 |

மேற்படி வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி, 2018-2019, 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி உயர்வுக்கு மேற்காண் அலுவலர்கள் ஊட்டப்பதவியான மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிநிறைவு பெறவில்லை.

எனவே, 2018-2019, 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு தகுதியான நபர்கள் எவரும் இல்லாத காரணத்தினால், 2018-2019, 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கு துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலை “இன்மை பட்டியல்” (Nil Panel) ஆக வெளியிடப்பட வேண்டும்.

அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.06.10.200 9.ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி பணியமைப்பில் துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி வகுப்பு IA-ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/18301/2021**

ஆகவே, *2018-2019*, *2019-2020* மற்றும் *2020-2021* ஆம் ஆண்டிற்கு துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு தகுதியான நபர்கள் எவரும் இல்லாத காரணத்தினால் "இன்மை பட்டியல்" *(Nil Panel)* ஆக வெளியிடவும், அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும், சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 03.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு "இன்மை பட்டியல்" *(Nil Panel)* ஆக வெளியிடவும், அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும், சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**வ.து.ந.க.எண்.தொ.வ/3037/2021**

**தீர்மானஎண்.638/2021** **நாள்:09-08-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - தொழில் வரி - கொரோனா வைரஸ் தொற்று பரவல் (Covid 19) - இரண்டாவது அலை காரணமாக - 2021-2022ம் ஆண்டுக்கான முதலாம் அரையாண்டு தொழில்வரி குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்களிடமிருந்து வசூலிக்க காலக்கெடு 01.11.2021 வரை அவகாசம் அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - பெருநகர சென்னை மாநகராட்சியிலும் 2021-2022 நிதியாண்டின் முதலாம் அரையாண்டிற்கான தொழில்வரியினை 01.11.2021 வரை வசூலிக்க கால நீட்டிப்பு வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மத்திய / மாநில / பிற அரசுத்துறை சார்ந்த அலுவலர் / பணியாளர், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள், தொழில் புரிவோர், வணிகர்கள் ஆகியோரிடமிருந்து தொழில்வரி வசூலிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்ட விதி *1919* துணை விதி *138*ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*2021-2022* நிதியாண்டிற்குண்டான முதலாம் அரையாண்டு தொழில் வரியினை பின்வரும் அட்டவணையின்படி செலுத்தப்படவேண்டும்.

| வ. எண் | அரையாண்டுக்கான வருமானம் | | *01.04.2018* முதல் திருத்தியமைக்கப் பட்ட அரையாண்டுக்கான தொழில்வரி ரூ. |
|---|---|---|---|
| | முதல் ரூ. | வரை ரூ. | |
| *1* | *21,000* வரை | - | -- |
| *2* | *21,001* | *30,000* | *135/-* |
| *3* | *30,001* | *45,000* | *315/-* |
| *4* | *45,001* | *60,000* | *690/-* |
| *5* | *60,001* | *75,000* | *1025/-* |
| *6* | *75,001/-* மற்றும் அதற்கு மேல் | - | *1250/-* |

மேற்படி அரசாணை எண்.*199*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் *(MA.IV)* துறை, நாள்: *19.06.2021*ல், உள்ளாட்சி அமைப்புகளுக்கு (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்கள் செலுத்த வேண்டிய தொழில் வரியினை செலுத்துவதற்கு காலக்கெடு *01.11.2021* வரை கால அவகாசம் அளித்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, 2021-2022 நிதியாண்டின் (01.04.2021 முதல் 30.09.2021) முதலாம் அரையாண்டிற்கான தொழில் வரியினை *30.09.2021*க்குள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்கள் செலுத்த வேண்டிய தொழில் வரியினை *01.11.2021* வரை கால நீட்டிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியிலும் *2021-2022* நிதியாண்டின் முதலாம் அரையாண்டிற்கான தொழில்வரியினை குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்களிடமிருந்து *01.11.2021* வரை வசூலிக்க கால நீட்டிப்பு வழங்க, சிறப்பு அதிகாரி -நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 03.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தொழில்வரியினை *01.11.2021* வரை வசூலிக்க கால நீட்டிப்பு வழங்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**ம.அ.4.சு.து.ந.க.எண்.சு3/3075/2021**

**தீர்மானஎண்.641/2021** **நாள்:09-08-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-4 - சுகாதாரத் துறை - கோட்டம் -34 முதல் 48 வரையில் உள்ள வைரஸ் நோய் அறிகுறிகள் கண்டறிய கணக்கு எடுக்கும் பணி மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிகள் மேற்கொள்ள மகளிர் சுய உதவி குழுவின் மூலமாக (FSW) 641 நபர்களை தற்காலிக பணியாளர்களாக ஜூலை 2021 முதல் செப்டம்பர் 2021 வரை மூன்று மாதத்திற்கு (01/07/2021 முதல் 30/09/2021 வரை) பணி நீட்டிப்பு பின்னேற்பு நிர்வாக அனுமதி.**

ஆணையர் அவர்களின் 02.04.2020 மற்றும் 23.03.2021 நாளிட்ட வாய்மொழி உத்தரவில், மண்டலம்-4, சுகாதாரத் துறை, தண்டையார்பேட்டையில் கோட்டம் 34 முதல் கோட்டம் 48 வரை உள்ள கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள 4114 அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 1,69,432 வீடுகளை 1182 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு FSW தற்காலிக பணியாளர்கள் நியமிக்க அறிவுத்தப்பட்டது..

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 08/04/2021 நாளிட்ட செயல்முறை ஆணையில், கொரோனா தடுப்பு களப்பணியாளர்கள் 25/03/2021 முதல் 24/06/2021 வரை 3 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.15000/-ல் பணியமர்த்தப்பட்டதை, திருத்தம் செய்து மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் (NULM) பணிபுரிந்து வரும் கொசு ஒழிப்பு பணியாளர்கள் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தினக்கூலி அடிப்படையில் கொரோனா தடுப்பு களப்பணியாளர்களையும் மாத ஊதியம் ரூ.12,121/-ல் பணியமர்த்த திருத்திய ஆணை வழங்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

மேலும், ஆணையர் அவர்களின் 04.05.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலின் தாக்கம் மிக அதிகமாக தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ள காரணத்தினால் அதாவது நாளொன்றுக்கு 4000 நபர்களுக்கு மேல் நோயினால் பாதிக்கப்படும் நிலையில், இந்த பகுதிகளில் பணிபுரிந்து வரும் கொரோனா தடுப்பு பணியாளர்களை ஊக்கப்படுத்தும் விதமாக மண்டலம்-4ல் பணிபுரியும் FSW தற்காலிக பணியாளர்கள் அனைவரும் இருசக்கர வாகனத்தில் பயணித்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது, அவர்களின் பணி விவரங்களை அலைபேசி மூலம் உடனுக்குடன் உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டியுள்ளது. எனவே, பணியாளர்கள் அவர்களின் ஊதியத்துடன் சேர்த்து போக்குவரத்து மற்றும் அலைப்பேசிக்கென மாதம் ரூ.750/- வழங்க அனுமதித்து ஆணையிடப்பட்டது.

இதனை தொடர்ந்து, சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.483/2021, நாள்.19.05.2021ல், மண்டலம்-4, தண்டையார்பேட்டை, கோட்டம்-34 முதல் கோட்டம்-48 வரை உள்ள குறுவட்ட பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிற்கு சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கெடுக்கும் பணிகள் மற்றும் நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பணிகளுக்கும் தேவையான (FSW) காய்ச்சல் களப்பணியாளர்கள் 995 நபர்கள் 01/04/2021 முதல் 30/06/2021 வரை பணி மேற்கொள்ள ஆணையும் மற்றும் இப்பணியாளர்களுக்கு போக்குவரத்து மற்றும் அலைப்பேசிக்கான செலவினத் தொகை மூன்று மாதத்திற்கு வழங்கவும் அனுமதி பெறப்பட்டது. இப்பணியாளர்களுக்கான பணிக்காலம் 30/06/2021 அன்றுடன் முடிவடைகிறது.

ஆணையர் அவர்களின் 25.06.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில், மண்டலம்-4, சுகாதாரத்துறையில் கொரோனா நோய் தடுப்புக்காக பணிபுரியும் 995 (FSW) காய்ச்சல் களப்பணியாளர்கள் 01.07.2021 முதல் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு கோட்டங்கள் வாரியாக கலம் எண்.3ல் உள்ள சதவீதங்களின் அடிப்படையில் நபர்களின் எண்ணிக்கை குறைத்து பணி மேற்கொள்ளுமாறு ஆணையிடப்பட்டுள்ளதால், கலம்-4ல் உள்ளவாறும் மொத்தம்-354 நபர்கள் குறைக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து தற்போது கலம் எண் -5ல் உள்ளவாறு மொத்தம் 641 நபர்கள் கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

| வ.எண் | நபர்களின் எண்ணிக்கை | குறைக்கப்பட்ட சதவீதம் | குறைக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | 01.07.2021 முதல் பணிமேற்கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 34 | 80 | 30% | 24 | 56 |
| 35 | 110 | 60% | 66 | 44 |
| 36 | 80 | 30% | 24 | 56 |
| 37 | 75 | 60% | 45 | 30 |
| 38 | 68 | 30% | 20 | 48 |
| 39 | 60 | 30% | 18 | 42 |
| 40 | 60 | 30% | 18 | 42 |
| 41 | 74 | 30% | 22 | 52 |
| 42 | 55 | 30% | 17 | 38 |
| 43 | 60 | 30% | 18 | 42 |
| 44 | 50 | 30% | 15 | 35 |
| 45 | 75 | 30% | 23 | 52 |
| 46 | 50 | 30% | 15 | 35 |
| 47 | 58 | 30% | 17 | 41 |
| 48 | 40 | 30% | 12 | 28 |
| | **995** | | **354** | **641** |

இதனை தொடர்ந்து, மண்டல நல அலுவலர் -4 அவர்களின் 07.07.2021 நாளிட்ட வாய் மொழி உத்தரவின்படி, மண்டலம்-4, தண்டையார்பேட்டை, கோட்டம்- 34 முதல் கோட்டம்-48 வரை உள்ள குறுவட்ட பகுதிகளில் (FSW) 641 தற்காலிக பணியாளர்களை மீண்டும் பணியமர்த்துவது அவசியமாவதால் 01/07/2021 முதல் 30/09/2021 வரை மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு ஆணை பெற ஆணையர் மற்றும் சிறப்பு அலுவலர் (மன்றம்) அவர்களுக்கு குறிப்பு வைக்க, மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் -4 அவர்களின் 08.07.2021 நாளிட்ட அனுமதி பெறப்பட்டது.

எனவே, மண்டலம்-4, தண்டையார்பேட்டை, கோட்டம்-34 முதல் கோட்டம்-48 வரை உள்ள பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் மண்டலத்தில் உள்ள 4114 அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 1,69,432 வீடுகளை 1182 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரானா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர குழுக்கள் மூலங்களின் மூலம் 641 FSW தற்காலிக பணியாளர்கள் 01.07.2021 முதல் 30.09.2021 வரை மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்யவும் மற்றும் இப்பணியாளர்களுக்கு போக்குவரத்து மற்றும் அலைப்பேசிக்கான செலவினத் தொகை வழங்கவும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| (அ) | மண்டலம்4. கோட்டம் 34 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகளுக்கும், நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பணிகளுக்கும் தேவையான (FSW) காய்ச்சல் களப்பணியாளர்கள் 641 நபர்கள் 01.07.2021 முதல் 30.09.2021 வரை பணி நீட்டிப்பு பின்னேற்பு நிர்வாக அனுமதியும் மற்றும் இப்பணியாளர்களுக்கு போக்குவரத்து மற்றும் அலைப்பேசிக்கான செலவினத் தொகை மூன்று மாதத்திற்கு வழங்க பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,. |

| | |
|---|---|
| (ஆ) | மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.12,121/- வீதம் 641 நபர்களுக்கு மூன்று மாதத்திற்கு என்ற அளவில் (12121 x 641 x 3 மாதம்) ரூ.2,33,08,683/- மற்றும் போக்குவரத்து மற்றும் அலைப்பேசிக்கான செலவினத் தொகை மூன்று மாதத்திற்கு (750 x 641 x 3 மாதம்) ரூ.14,42,250/- ஆக மொத்தம் ரூ.2,33,08,683/- + ரூ. 14,42,250/- = ரூ.2,47,50,933/- (எழுத்தால் ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து ஏழு இலட்சத்து ஐம்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்ய அனுமதியும், |
| (இ) | மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-70-12-03 லிருந்து செலவு செய்யவும், |
| (ஈ) | மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-70-12-03ல் ரூ.2,47,50,933/-ல் நிதி ஆலோசகர் மூலமாக நிதி ஒதிக்கீடு செய்யவும், |

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**Deputy Commissioner (Health) remarks dated.30.07.21 as follows:**

**"Till 31st July, from 1st August as per ICMR report further reduction based on further orders"**

முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் மேற்குறிப்புடன், அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**El.Dc.No.AEE/Z14/ 096/2021**

**Resolution No.642 /2021** **Date:09-08-2021**

**Greater Chennai Corporation - Electrical Department – Solid Waste Management Projects – Reclamation of Perungudi Dumping Ground through Bio mining through 6 Concessioners – Separate new 11 KV/433 V HT Service Connections requested from TANGEDCO – Special exemption awaited from CMD TANGEDCO – supply and installations of new 11kv/433v transformers and accessories for obtaining HT service connections from TANGEDCO - Administrative sanction for four separate HT service – For orders.**

The Solid Waste Management Department has issued orders to M/s.Westart Communication India Pvt. Ltd, M/s. Premier Precision Surface & M/s. Zigma Global Environ Solutions Pvt Ltd for the work of reclamation of Perungudi Dumping Ground through Bio mining for 6 Packages. Action has been initiated for availing separate 11 KV/433 V HT Service connections for each of the package sites from TANGEDCO.

As per the existing norms of TANGEDCO, 6 separate HT service connections cannot be given for the single location, metering point should be provided within 30 mtr. from the entrance and each site should be physically segregated.

A D.O letter dt. 03.07.2021 has been sent by Principal Secretary/Commissioner to CMD TANGEDCO requesting to give exemption from the above conditions for effecting 6 separate 11 KV/433 V HT service connections at Perungudi Dumping Ground. In response to this the TANGEDCO officials have inspected the site and as the total power requirement is more than 3 MVA, SE/SOUTH –II TANGEDCO has requested to allocate & transfer 4000 sq. mtrs. of land for constructing TANGEDCO substation.

During the review meeting conducted by Principal Secretary/Commissioner, Dated 26.07.2021, M/s. Zigma Global Environ Solutions Pvt. Ltd. has stated that they are ready to commence their Bio-mining plants at Package 3 & 5 by 14.08.2021. Principal Secretary/Commissioner has instructed to provide electricity connections for the above two sites immediately.

Each of the Bio-mining plants to be operated by M/s. Zigma Global Environ Solutions Pvt. Ltd at package 3 & 5 require 400 KVA electricity connections. It is not feasible to avail new HT service connections from TANGEDCO immediately. At Perungudi Dumping Ground two HT service connections are already available. 800 KVA HT service connections has been availed for Garden Waste processing plant and a 1000 KVA HT service connection availed for Construction and Demolition waste processing plant. It is proposed to transfer the Electrical loads of Garden Waste Plant to the 1000 KVA HT service connection of C & D waste processing plant and to connect the electrical loads of Bio-mining Packages 3 & 5 (M/s. Zigma Global Environ Solutions Pvt Ltd) to the existing 800 KVA HT service connection by laying 5364 Mtr. Of 4core 400 Sqmm cable.

An estimate has been prepared and note put up to get Administrative sanction from the Special Officer (Council).

After the new HT service connections are obtained from the TANGEDCO this cable will be used for providing electricity to the Bio-mining plants of Package 1 & 2.

Among the Six Packages, except Package 1&2, the balance Package 3,4&5 are needed the a separate HT service from TANGEDCO.

For this, new 11kv/433v transformers with accessories are required and four separate estimates have been prepared as follows,

**El.Dc.No.AEE/Z14/ 096/2021**

| Sl.No | Bio Mining Project & Name of the Co. | Power capacity Required | Electrical Installations Required | Estimate Amount |
|---|---|---|---|---|
| 1 | Package – 3 M/s.ZigmaGlobal Environ Solutions Private Ltd. | 550 KVA and additional load (in Future) 250 KVA | 1000 KVA Transformer with Necessary Panels | **13985500.00** |
| 2 | Package – 4 M/s.ZigmaGlobal Environ Solutions Private Ltd. | 550 KVA and additional load (in Future) 120 KVA | 800 KVA Transformer with Necessary Panels | **11722300.00** |
| 3 | Package – 5 M/s.ZigmaGlobal Environ Solutions Private Ltd. | 550 KVA and additional load (in Future) 250 KVA | 1000 KVA Transformer with Necessary Panels | **13985500.00** |
| 4 | Package – 6 M/s.Westart Communications India Private Ltd. | 450 KVA | 630 KVA Transformer with Necessary Panels | **11056800.00** |

The estimate prepared for the supply and erection and commissioning of Transformer and its necessary accessories are prepared based on the Electrical Department Schedule Of Rate 2020 – 2021. The rates for the Transformer and other items have been approved by the Schedule of Rate Committee. The rate of same 630 KVA, 800 KVA, 100 KVA Transformer in the GEM portal are Rs.20,02,500/-, 27,77,000/, 34,21,000/- respectively. The rate for 4cx400 Sqmm cable is 1800/-per Mtr. The rate of 110 mm HDPE pipe in the GEM portal is Rs.747.90/- per mtr.

The Schedule of rate being lower is taken for preparing the estimate.

Hence,

1. Administrative Sanction for the supply, installation and commissioning of new 11kv/433v transformers and its accessories for availing HT service connections separately for four different packages 3,4,5&6 from TANGEDCO for the amounts mentioned in the above table, to call for tender separately for each Package
2. To meet out the expenditure for the above work from the budget provisions of Solid Waste Management Department.

Sl.No. 1 & 2 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.04.08.2021 is read.

**"Sl.No. 1 & 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

*******

**El.Dc.No.AEE/Z14/ 097/2021**

**Resolution No.643 /2021** **Date:09-08-2021**

**Greater Chennai Corporation - Electrical Department – Solid Waste Management Projects – Reclamation of Perungud Dumping Ground through Bio mining through 6 Concessioners – Separate new 11 KV/433 V HT Service Connections requested from TANGEDCO – Special exemption awaited from CMD TANGEDCO – Commencement of Bio mining plants at Package 3 & 5 – 400 KVA electricity connection to be provided immediately – supply and laying of 5324 mtrs of 4CX400 sq.mm cable immediately – Administrative sanction for Rs.1,41,55,600/- – For orders.**

The Solid Waste Management Department has issued orders to M/s.Westart Communication India Pvt. Ltd, M/s. Premier Precision Surface & M/s.Zigma Global Environ Solutions Pvt Ltd for the work of reclamation of Perungudi Dumping Ground through Bio mining for 6 Packages. Action has been initiated for availing separate 11 KV/433 V HT Service connections for each of the package sites from TANGEDCO.

As per the existing norms of TANGEDCO, 6 separate HT service connections cannot be given for the single location, metering point should be provided within 30 mtr. from the entrance and each site should be physically segregated.

A D.O letter dt. 03.07.2021 has been sent by Principal Secretary/Commissioner to CMD TANGEDCO requesting to give exemption from the above conditions for effecting 6 separate 11 KV/433 V HT service connections at Perungudi Dumping Ground. In response to this the TANGEDCO officials have inspected the site and as the total power requirement is more than 3 MVA, SE/SOUTH –II TANGEDCO has requested to allocate & transfer 4000 sq. mtrs. of land for constructing TANGEDCO substation.

During the review meeting conducted by Principal Secretary/Commissioner, Dated 26.07.2021, M/s. Zigma Global Environ Solutions Pvt. Ltd. have stated that they are ready to commence their Bio-mining plants at Package 3 & 5 by 14.08.2021. Principal Secretary/Commissioner has instructed to provide electricity connections for the above two sites immediately.

Each of the Bio-mining plants to be operated by M/s. Zigma Global Environ Solutions Pvt. Ltd at package 3 & 5 require 400 KVA electricity connections. It is not feasible to avail new HT service connections from TANGEDCO immediately. At Perungudi Dumping Ground two HT service connections are already available. 800 KVA HT service connection has been availed for Garden Waste processing plant and a 1000 KVA HT service connection availed for Construction and Demolition waste processing plant. It is proposed to transfer the Electrical loads of Garden Waste Plant to the 1000 KVA HT service connection of C & D waste processing plant and to connect the electrical loads of Bio-mining Packages 3 & 5 (Zigma Global Environ Solutions Pvt Ltd) to the existing 800 KVA HT service connection.

**El.Dc.No.AEE/Z14/ 097/2021**

A Total of 5364 mtr of 4CX400 sq.mm underground cable and other accessories have to be supplied and laid for connecting the Bio-mining plants 3 & 5 to the 800 KVA HT panel. After the new HT service connections are provided this cable will be used for providing electricity to the Bio-mining plants of Package 1 & 2.

An estimate of Rs. 1,41,55,600/- has been prepared for the supply and laying of 5364 mtrs of 4CX400 sq.mm underground cable, based on the Electrical Department Schedule Of Rate 2020 – 2021. The rate for the 4CX400 sq.mm underground cable has been approved by the Schedule of Rate Committee. The rate of same cable in the GEM portal is Rs.1,800/- per mtr. The rate of 110 mm HDPE pipe in the GEM portal is Rs.747.90/- per mtr.

The Schedule of rate being lower is taken for preparing the estimate.

Hence,

1. Administrative sanction for the work of supply and lay 5364 mtr. of 4CX400 sq.mm underground cable and other accessories for providing Electrical Power for the Bio-mining plants of packages 3 & 5 of M/s. Zigma Global Environ Solutions Pvt. Ltd. at Perungudi Dumping Ground at an Estimated cost of Rs.1,41,55,600/-
2. To meet out the expenditure for the above work from the budget provisions of Solid Waste Management Department.

Sl.No. 1 & 2 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner’s Note dated.04.08.2021 is read.

**“Sl.No. 1 & 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council.”**

*******